I Additional District Court, Thoothukudi.

O.S.No.127/2021 நாள் : 10.06.2025 வா.சா.1– திரு. கண்ணன்.

**முதல் விசாரணை :–**

05.03.2020–ல் வாதிகளாகிய எங்களுக்கு பிரதிவாதி எழுதிக் கொடுத்த கிரைய ஒப்பந்தம் அசல் **வா.சா.ஆ 1**. 28.07.2021–ல் நாங்கள் பிரதிவாதிக்கு கொடுத்த சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ 2**. 02.08.2021–ல் நாங்கள் பிரதிவாதிக்கு கொடுத்த சட்ட அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ 3.** அதை பிரதிவாதியும், அவரது வழக்கறிஞரும் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் **வா.சா.ஆ 4 வரிசை** (எண்ணிக்கையில் 2). வா.சா.ஆ 2–ஐ பிரதிவாதி பெற்றுக் கொள்ளாததால் திருப்பப்பட்ட அஞ்சல் உறை **வா.சா.ஆ 5**. தாவா சொத்து சம்பந்தமாக நாங்கள் கொடுத்த செய்தித்தாள் அறிவிப்பு **வா.சா.ஆ 6**. 29.08.2011 தேதியிட்ட இராதாகிருஷ்ணன் வகையறா 1ம் வாதிக்கு எழுதிக் கொடுத்த பொது அதிகார பத்திரம் பதிவு நகல் **வா.சா.ஆ 7**. 19.09.2021 அன்று வெங்கடசலம் என்பவரின் பொது அதிகாரம் பெற்ற கார்த்திகேயன் என்பவர் 1ம் வாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் பதிவு நகல் **வா.சா.ஆ 8**. 11.10.2021 அன்று அருண் செல்டர் நிறுவனம் எனக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் பதிவு நகல் **வா.சா.ஆ 9**. 19.10.2010–ல் நாராயணசாமி என்பவர் 1ம் வாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் பதிவு நகல் **வா.சா.ஆ 10**. 19.12.2011 தேதியில் மாரியம்மாள் வகையறா எங்களுக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் பதிவு நகல் **வா.சா.ஆ 11**. 23.04.2012–ல் சுமதி, கஸ்தூரி ஆகியோர் எங்களுக்கு எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் பதிவு நகல் **வா.சா.ஆ 12**. 1ம் வாதி பெயரில் உள்ள வருமான வரி கணக்கு 2019 முதல் 2022 ஆண்டிற்கு சம்பந்தப்பட்டது **வா.சா.ஆ 13**. அதே காலத்திற்கு என் வருமானவரி

கணக்கு **வா.சா.ஆ14**. என் வங்கி கணக்கு கணக்கு பட்டியல் **வா.சா.ஆ15**. 1ம் வாதியின் வங்கி கணக்கின் கணக்கு பட்டியல் **வா.சா.ஆ16**. ஆகவே தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.06.10 17:50:05 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.